மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்

MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Tamil and Religious Feminism

Dr. M. Hemamalini Achuthan

Assistant Professor, Department of Tamil, Vels Institute of Science Technology and Advanced Studies, Chennai, India

Manuscript ID :
MT127A0064

Volume : **2**

Issue : **3**

Month : **September**

Year : **2022**

Received: 22.09.2022
Revised: 24.09.2022
Accepted: 26.09.2022
Published: 30.09.2022

Pages : 197-205

DOI:
10.5281/zenodo.7372132

ABSTRACT:

From the ancient times to the present time, the glories of women are also highlighted that women can achieve anything. Poets and scholars exemplify the glories of women with good feelings. It is implied that it is a woman who gets the pride of the mother and that the power to give a good child to the society belongs to the woman. It is emphasized that only a woman can bring goodness from home to the world.

KEYWORDS:

Status of women in Saivism in social history, Saivism that glorified femininity, Women in the society of the Sangam religion, Women in justice literature, Women in Kapia period, Status of women in Saivism in contemporary society

தமிழும் சமயமும் பெண்ணியம்

முனைவர் எம். ஹேமமாலினி அச்சுதன்,
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்,
சென்னை, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

பண்டையக் காலம் முதல் இக்காலம் வரை பெண்ணின் பெருமைகளை பற்றியும் பெண்ணால் அனைத்தும் சாதிக்க முடியும் என்பதை எடுத்துக்காட்டப்படுகிறது. கவிஞர்கள் மற்றும் அறிஞர்கள் பெண்ணின் பெருமைகளை நல்லுணர்வுகளோடு எடுத்துக் கூறுப்பட்டுள்ளது. ஒரு பெண் தான் தாயின் பெருமை அடைகிறாள் என்பதும், ஒரு நல்ல குழந்தையை சமுதாயத்தில் அளிக்கக் கூடிய ஆற்றல் பெண்ணுக்குத்தான் என்பதை உணர்த்தப்பட்டுள்ளது. வீடு முதல் உலகம் வரை நல்லறம் புரிய பெண்ணால் தான் முடியும் என்பதை எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

கருச்சொற்கள்

சமூதாய வரலாற்றில் சைவத்தில் பெண்ணின் நிலை, பெண்மையைப் போற்றிய சைவம், சங்க காலச் சமூதாயத்தில் பெண், நீதி இலக்கியத்தில் பெண், காப்பிய காலத்தில் பெண், இக்கால சமூதாயத்தில் சைவ சமயத்தில் பெண்ணின் நிலை

முன்னுரை

பெண்ணியம் என்ற சொல் பேணுதல் அனைத்து உயிரினங்களையும் அரவனைக்கும் மென்மையான குணம் கொண்டவள் பெண். சமூக அவசியமாக உள்ள பெண்ணியம் என்பது பெண்களைப் பற்றிய சிந்தனை என்றும், சமூகப் பிரச்சினையாக உருப்பெற்றது. அதன் ஒரு பரிணாம வளர்ச்சியாக இன்று களத்தில் நுழைந்து ஒரு உத்வேகத்துடன் வளர்ந்து நவீன இலக்கியப் பார்வையாக ஆக்கம் பெற்றுள்ளது.

பண்டைய காலம் முதல் நவீன காலம் வரை பேசப்படும் கருத்தாக்கங்களில் பெண்ணியம் முதன்மை இடம் வகிக்கிறது எனலாம். பெண்களின் பிரச்சனைகளின் எதிரொலியை அனைத்து துறைகளிலும் கேட்க முடிகிறது. பெண்கள் தங்களின் பிரச்சனைகளை தங்களே முன்வந்து எழுதுவது, மற்றொன்று பெண்களின் நிலை பற்றி ஆண்கள் எழுதுவது. அழகுணர்ச்சி என்பது உள்ளத்தால் உணரப்படுவது ஒரு பொருளைப் பற்றிய எண்ணம், கற்பனை ஆகியவற்றைப் பற்றி நிற்கும். கவிதைகளில் அல்லது பாடல்களில் பெண்களின் உடலமைப்புகளை இயற்கைப் பொருள்களோடு

ஒப்புமைப்படுத்தி அவற்றிகே உரியனவாக உணர்ந்து மகிழ்வதால் அவற்றை மக்கள் விரும்பி அனுபவிக்கின்றனர்.

பெண்ணை மயில் என்றும் குயில் என்றும் நிலவென்றும் பாராட்டுவதை விட்டுவிட்டுப் பாரதியைப் போல, பெண்ணைப் பெண்ணாகப் பார்த்தாலே போதும், அவர்களே தம்முடைய முன்னேனற்றத்தினை அடைவார்கள் என்பதனை அவரது கீழ்க்காணும் கவிதை தெளிவுபடுத்துகிறது.

“பெண்ணை மயில் என்றோம் - அவள் ஆட்டத்தை அடக்கி விட்டோம்!” (வா.கே.வ.-தொ-1ப-583)

என்ற கவிதை பெண்களை வருணித்தது மட்டுமின்றி அதேநேரத்தில் அவர்களை அடக்கிவிட்டதாகவும் எடுத்துக் கூறும் விதமாக அமைந்துள்ளது. பெண்ணியம் பற்றிய மாறிவரும் சூழலுக் கேற்றவாறு பெண் குரலை உயர்த்திப் பிடிக்கும் பல கவிஞர்கள் எழுதி வருகிறார்கள். (வார்த்தைகள் கேட்ட வரம் (தொ-1) ப-583)

பெண்மையைப் போற்றிய சைவம்

சைவ உலகில் பெண்கள் இழிவாகக் கருதும் நிலை இல்லை பரவையார், சங்கிலியார், இசை ஞானியார், காரைக்காலம்மையார், மங்கையர்க்கரசியார் ஆகியோர் சைவம் வளர்த்த பெண்மணிகள். காரைக்காலம்மையார் இறைவனின் அருள் பெற்றவர். இறைவன் ஆடும்போது அந்த ஆடலுக்குரிய பாடலைப் பண்ணோடு இசைத்த மூதாட்டி சைவக்கோயில்களில் உள்ள 63 நாயன்மார்களின் உருவச் சிலைகளைப் பார்த்திருக்கிறீர்களா?

எல்லோரும் நின்று கொண்டிருக்கக் காரைக்காலம்மையார் உட்கார்ந்திருப்பார். இறைவன் இவரை அம்மையே! என அழைத்தான் மங்கையர்க்கரசியார் பாண்டியனின் மனைவி. இவரைத் திருஞானசம்பந்தர் மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை வரிவளைக் கைம்மாடமானி பங்கயச்செல்வி பாண்டிமாதேவி என்று பாடுகின்றார். செம்பியன்மாதேவி என்ற சோழர்குல அரசி சிவபெருமானுக்குப் பல கோயில்களைக் கட்டிய பெருமைக்கு உரியவர். இவர் பெயரால் தமிழகத்தில் ஓர் ஊர் உள்ளது.

சமூதாய வரலாற்றில் பெண்ணின் நிலை

ஒரு சமுதாயம் தன் பெண்ணினத்துக்கு அளிக்கும் உரிமை, பெருமைகளை உரைக்கல்லாகக் கொண்டு அச்சமுதாயத்தின் பண்பாட்டை அறிஞர்கள் மதிப்பிடுவர் என்று எஸ்.இராமகிருஷ்ணன் கூறுகிறார்.

மனிதன் என்பதால் ஆணுக்குக் கிடைக்கும் உரிமைகள், மனுஷி என்பதால் பெண்ணுக்குக் கிடைத்து விடுவதில்லை. சில நிபந்தனைக்கட்குட்பட்டே உரிமைகள் நிர்ணயிக்கப்படுகின்றன. பெண்ணின் நடத்தைப் பற்றிய சமூகப்பார்வையே அவருடைய உரிமைகளை நிர்ணயிக்கிறது. சட்டம் பெண்ணின் மனித உரிமையை மதிக்கும் போதுகூட சமூகம் அதை நிராகரிக்கிறது.

பெண்ணுரிமையை நடைமுறைப்படுத்த வீரமிக்க ஆண், நெஞ்சுரம் கொண்ட பெண் ஆகிய இருபாலர் உழைப்பும் அவசியமாகும். இதனை நினைத்தே இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்கள் பலர் கல்வியில் பெண்களுக்கு உரிமை வேண்டும். திருமணம், பொருளாதாரம் போன்றவற்றில் சுதந்திரம் பெற்றிருக்க வேணடும் என்கின்றனர். தமிழன்பனும் இவ்வுரிமைகளைத் தம் கவிதையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

"படிப்பது என்பது கல்வியில் பாதியே
பிரயோகிப்பதில்தான் மீதி நிரம்பும்
சரி என்பதைச் சார்ந்து நிற்பதும்
தவறு என்பதைத் தண்டித்து ஒழிப்பதும்
அறிவின் வளர்ச்சிக்கு அடையாளங்கள்" (தீ.க.தொ.-3, ப.-269)

பண்டைய சமுதாயத்தில் பெண்

தாய்வழிச் சமுதாய அமைப்பே உலகளாவிய அமைப்பாக இருந்தது என்றும் (சாந்தி சச்சிதானந்தம் முன்னுரை பெண்களின் சுவடுகளில் பக்-115) பெண்ணுக்குள்ள பெருமையெல்லாம் தாய்மையால்தான். இத்தாய்மை உலக வளர்ச்சிக்கும், தொண்டுக்கும் உரியதாக விளங்குவதோடு, குழந்தைப் பேற்றிற்குரியவள், அக்குழந்தைகளைப் பேணிப் பாதுகாப்பவள், குடும்பப் பொறுப்புடையவள், உணர்வு ரீதியானவள், எதற்கும் எந்நிலையிலும் ஒத்துப்போகும் தன்மையுடையவள், குடும்பம் என்ற அமைப்பிற்குக் கட்டுப்பட்டவள் என்ற அனைத்துப் பண்புகளின் இருப்பிடம்தான் தாய்மையாகும். (கதிர்.மகாதேவன், இரா.மோகன்,பெண்ணியம்,பக்-81-82)

பண்டைய காலத்தில் பெண்களின் சமுதாயம் உயர்ந்த நிலையில் இருந்ததை எடுத்துக்கூறும் விதமாக இராமாயணத்திலும், மகாபாரதத்திலும் பெண்களின் பங்கு உயர்வாக இருந்தது. பெண்கள் தங்களுக்கான உரிமையை, சுதந்திரத்தைக் கேட்டுப் பெற வேண்டியதில்லை. போதிய மனோதிடம் இல்லாததால் தான் அவர்கள் அடிமையாக வாழ நேரிடுகிறது. பெண்களால் சமுதாயத்தில் மாற்றத்தைக் கொண்டு வர முடியும்.

நமது பண்டைய சமுதாயத்தில் பெண்கள் சுதந்திரமாக வாழ்ந்து வந்தனர். இடைப்பட்ட காலத்தில் பெண்களிடம் இருந்து பறிக்கப்பட்ட சுதந்திரம் மீட்கப்பட வேண்டும். அதேநேரத்தில் பெண்கள் தங்களது சுதந்திரத்தை சரியாகப் பயன்படுத்துவது

அவசியம். பெண்களின் உரிமைக்காகப் போராட பல்வேறு அமைப்புகள், இயக்கங்கள் உள்ளன. ஆனால் பெண்கள் அடைய வேண்டிய உரிமையை இதுவரை முழுமையாக அடையவில்லை. இதற்கு வேறு யாரும் காரணம் இல்லை. பெண்களின் மனோதிடம் தான் காரணம். பொதுவாக ஆண்களை விட பெண்களுக்கு உடல் வலிமை குறைவாக காணப்படும். இதனால் தங்களது மன வலிமையை அதிகரித்துக் கொள்வது மட்டுமின்றி உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். (பெண்களால் சமுதாயத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும், வானதி சீனிவாசன்,)

வெற்றி
தொட்டுக் கொள்ள வேண்டிய
சந்தனம் நீங்கள்!
தோல்வி
தோட வந்தால்
சுட்டுப் பொசுக்க வேண்டிய
கந்தகம் நீங்கள்! **(வார்த்தைகள் கேட்டவரம் தொ-1 பக்542-543)**

பெண்களுக்கு தேவையான ஆற்றல், பெண்களிடமே உள்ளது என்று நம்பிக்கை ஊட்டுகிறார் கவிஞர் தமிழன்பன் அவர்கள்.

சங்க காலச் சமுதாயத்தில் பெண்

திணை அடிப்படையில் அமைந்திருந்த சங்ககாலச் சமுதாய வாழ்வு நிலப்பிரிவின் அடிப்படையில் அமைந்திருந்தது. தொழிலில் உயர்வு தாழ்வு காணப்படவில்லை. அந்தந்த நிலத்துக்குரிய தொழிலில் பெண்களும் துணை நின்றனர் என்பதற்கானச் சான்று சங்கப்பாக்களில் பரவலாகக் காணக் கிடக்கின்றன.

திணைப்புனம் காத்தல் குறுந்தொகை, 223-4
பால்தயில் நெய்விற்றல் புறம், 33-2-6
உழவுத்தொழில் புறம், 61:1-3

சங்க காலச் சமுதாயத்தில் பெண்கள் அனைத்து துறைகளிலும் திறன் மிக்கவர்களாக இருந்துள்ளனர். ஆண் புலவர்களுக்கு நிகராக பெண் புலவர்கள் இலக்கியத்தில் பயன்படுத்திய சொற்கள் வியப்பைத் தருகின்ற அளவிற்கு புலமைமிக்கவர்களாக இருந்தனர். அதைபோல் அரசனுக்கு ஆலோசனைகள் கூறும் மந்திரியாகவும், தூது சென்று வெற்றியுடம் திரும்பும் மதிநுட்பம் கொண்ட தூதுவராகவும், புலமையுடன் சமுதாயத்தைத் திருத்தும் ஆளுமைத்திறன் கொண்டவராகவும் இருந்துள்ளனர். ஆங்கிலேயர்களை எதிரித்து போர் புதிந்த ஜான்சி ராணியைப் போன்று பல வீரப் பெண்மணிகளும் வாழ்ந்துள்ளனர்.

மங்கையராகப் பிறப்பதற்கே-நல்ல
மாதவம் செய்திடல் வேண்டுமம்மா-அவர்
பங்கயக்கை நலம் பார்த்தலவோ-இந்தப்
பாரில் அறங்கள் செழிக்கு தம்மா

என்று கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை பெண்களின் உயர்வை போற்றிப் பாடியுள்ளார். சங்ககாலத்தில் மட்டுமல்லாமலும் தற்காலத்திலும் கல்வி, மருத்துவம், சட்டம், பொறியியல் என அனைத்துத் துறைகளிலும் பெண்கள் தடம் பதித்துள்ளனர். (க.திலகவதி, சங்ககால மகளிர் வாழ்வில் பக்.273)

நீதி இலக்கியத்தில் பெண்

எல்லா இலக்கியத்தில் பெண் உயர்வாக பேசப்பட்டாலும், திருவள்ளுவர் திருக்குறளில் பெண்ணின் பெருமை பேசினாலும், ஆணின் மேலான்மை பார்வையிலேயே உள்ளது. ஆணுக்கு நிகரான இடத்தைப் பெண்ணுக்கு வழங்கவில்லை என்பதே பெண்ணியலார் கருத்து.

இல்லறம் துறவறம் இரண்டையும் கூறி, இரண்டின் சிறப்புகளையும் விளக்கி இரண்டு நெறியையும் பெருமைப்படுத்துவார் திருவள்ளுவர். நல்ல நெறியிலே இல்வாழ்க்கை நடத்துவோன் வாழ்க்கையின் குறிக்கோளை அடைய முயல்வோருள் தலைமையானவள்.

மனைத் தக்க மாண்புடையாளாகித் தற்கொண்டாள்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை **(குறள்7)**

என்கிறது. அதாவது குடித்தனத்துக்கு ஒத்த பெருமையுடையவளும், தன் கணவனுடைய வருவாய்க்குத் தக்கபடி செலவு செய்கிறவளுமாள மனைவியே சரியான வாழ்க்கைத் துணைவி என்கிறார் வள்ளுவர். மேலும்

பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின் **(குறள்-54)**

அதாவது கற்பு என்ற மன உறுதியுள்ள பெண்ணைக் காட்டிலும் பெருமை தரக்கூடிய பொருள் இவ்வுலகத்தில் வேறு என்ன இருக்கிறது? ஒன்றுமில்லை என்கிறார். மேலும் இவர் குடும்பம், கற்பு இரண்டும் பெண்ணிற்குத் தேவை என்றும் வலியுறுத்துகின்றார். ((முனைவர் அரங்க.மல்லிகா தமிழ் இலக்கியத்தில் பெண்ணியம்) (நாஞ்சில் ஆனந்தன்- சங்க இலக்கியத்தில் மனித உரிமைகள்)

காப்பிய காலத்தில் பெண்

பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீலமணி மிடற்று ஒருவன்; -

எனச் சிவபெருமானைப் பற்றி ஔவையார் கூறியுள்ளார். தமிழ் இலக்கியங்களில் சிறந்த காப்பியமான சிலப்பதிகாரத்தில் பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும் என சிவபெருமானைப் பிறவா யாக்கைப் பெரியோனாக இளங்கோவடிகள் கூறியுள்ளார். சைவ சமயம் சிந்தனையோடு தொடர்புடையது. இச்சமயமே உலகில் தோன்றிய முதற்சமயம் ஆகும்.

காப்பியம் என்றதும் நம் நினைவிற்கு வருவது கம்பராமாயணமும், மகாபாரதமுமே. ஆக்கவும், அழிக்கவும் சக்தி பெற்றவள் பெண். காப்பியங்களில் தலைவர்களின் பெருமையை பற்றி அதிகம் பேசப்பட்டதே தவிர, பெண்ணை பற்றி; பேசப்படவில்லை என்பதே உண்மை. **இராமாயணத்தில் யாராலும் தூக்க முடியாத சிவதனுசை ராமன் தூக்கி நாண் பூட்டி வளைத்து ஒடித்து சீதையை மணந்தான், என ராமனின் பெருமை பேசப்படுகிறதே தவிர, பந்தாடிக்கொண்டிருக்கும் போது பந்து சிவதனுசு வைக்கப்பட்டிருக்கும் பெட்டிக்கடியில் போகவே அதை மிக லகுவாக நகர்த்தி அந்தப் பந்தை எடுத்த சீதையின் வல்லமை மிகக்குறைவாகவே விமர்சிக்கவும், பேசவும்படுகிறது.**

பாஞ்சாலி பஞ்ச பாண்டவர்களின் மனைவியாக விளங்குகிறாள் மகாபாரதத்தில். பஞ்ச பாண்டவர்களை பஞ்ச பூதங்களாகக் கொண்டாள் அனைத்திற்கும் ஒரு தலைவியே. இந்த உலகமே பஞ்ச பூதங்களால்தான் இயங்குகிறது. ஒரு பெண்ணால் மட்டுமே பஞ்ச பூதங்களைக் கையாள முடியும் என்பதும், பஞ்ச பூதங்கள் இயங்க ஒரு தூண்டுதலாக பெண்சக்தி தேவை என்பதும் புலனாகும்.

கண்ணகியைப் பிரிந்து வாழ்ந்த கோவலனின் பரத்தையர் கூட்டை அடைந்ததற்கு அக்காலச் சமூகம் கண்டிக்கவில்லை. கோவலன் பிரிந்த நாள் முதல் அவன் திரும்பி வரும் நாள் வரை பொறுந்திருந்த கண்ணகியின் பொறை காப்பியத்தில் பெரிதும் போற்றப்படுகின்றது. (எம்.ஆர்.அடைக்கலசாமி,தமிழ் இலக்கிய வரலாறு பக்.144)

அமுத சுரபியில்
அள்ளி அள்ளி வழங்கிய
மணிமேகலை
மனத்தில்
ஒரு பருக்கையாக
விழமாட்டோமா என்று
தவித்தான் உதயகுமாரன் **(மின்மினிக்காடு பக்-73)**

என்ற கவிதையில் மணிமேகலை உள்ளத்தில் இடம்பெற மாட்டோமா என உதயகுமாரன் தவிப்பில் ஆக்கிய மணிமேகலையின் பெருமையடையச் செய்கிறது. அதுமட்டுமின்றி பல அறக்கருத்துக்கள் விளக்கமாகக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். மணிமேகலையில் உள்ள பொதுத்தன்மை அதே சமயம் புத்தர் காலம் முதல் நாகசேனர் காலம் வரையான பௌத்தத்தின் பொதுத் தன்மையும் ஆகும். உலகை உடலை மறுப்பதாலேயே பிறவாநிலை நிப்பாணம் கிட்டும் என்ற இலட்சியமே வாழ்க்கையானது. பெண்வழி மறுஇன உற்பத்தியை நிறுத்திவிட்டால் தனக்கும் பிறக்காமல் இருக்கும் நிலை கிட்டும் என்ற எதிர்பார்ப்பே எல்லா அறங்களுக்கும் சீலங்களுக்கும் பொன்னிழை ஆனது.

இக்கால சமூதாயத்தில் பெண்ணின் நிலை

எவ்வளவோ போராட்டங்களுக்குப் பின் பெண்ணின் முன்னேற்றம் அடைந்துள்ளதையும், அனைத்து துறைகளிலும் பெண்கள் தடம் பதித்ததையும், வீட்டில் தொடங்கும் பெண் விடுதலையே, நாட்டின் அரசியல் விடுதலைக்குக் கருவியாகின்றது. இந்த உண்மையை உணர்ந்த பாரதி, **மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம் என்று பார் அதிரக் குரல் எழுப்பினார். உவந்தொருவன் வாழ்க்கை சரியாய் நடத்த உதவுபவள் பெரும்பாலும் மனைவியாவாள். வாழ்க்கை என்னும் வண்டிக்குச் சக்கரமாக அமைபவள் பெண்** என்று பாரதிதாசன் குறிப்பிடுகிறார். **ஒரு உலகை ஆக்கவும் அழிக்கவும் சக்தி படைத்த ஒரே ஜீவன் பெண்** (இரா.பிரேமா, பெண்ணியம், மு.கு.நூ.பக்-32) என்கிறார் சாக்ரட்டீஸ்.

பெண் தெய்வ வழிபாடு பண்டையகாலம் முதல் இக்காலம் வரை வழிவழியாக கொண்டாடப்படுகிறது. சக்தியை வழிபாட்டுக் கடவுளாகக் கொண்டு வழிபட்டுவரும் சமயம் சைவ சமயமாகும். சக்தி ஒன்றே உலக உயிர்கள் அனைத்திற்கும் தெய்வம். அவரையே தாயாக வழிபட வேண்டும் என்ற கோட்பாட்டையுடையது இந்த சமயம். பயிர்கள் வேண்டியவுடன் வானம் மழையைப் பெய்வது போல் பக்தர்கள் வேண்டும்போதெல்லாம் அன்னையாக அருள்புரிபவர் சக்தி என்பது இவர்களுடைய

நம்பிக்கை. இந்த சமயத்தவர்கள் தங்களைச் சக்திதாசர் என்று அழைத்துக் கொள்வார்கள். செவ்வாடை, குங்குமம் போன்றவற்றை இவர்கள் அணிவர்.

முடிவுரை

சமூகம் எதுவானாலும், மொழி எதுவானாலும், சமுதாயச்சூழல் எதுவாக இருப்பினும் என்னதான் புரட்சி, பெண்மை, ஆணாதிக்கச் சமுதாயம் என்றெல்லாம் கூறினாலும், பெண்ணானவள் வாழ்க்கையில் **"தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாதவளாகவே விளங்குகிறாள்"**. (குறள்-56) விதிவிலக்காகச் செல்லும் சில பெண்கள் சரித்திரமும் படைக்கின்றனர். சாதனையும் புரிகின்றனர்.

இக்கருத்துக்களால் பெண்ணியம் என்பது சங்ககாலம் தொடங்கி தற்காலம் வரை, கல்வெட்டு தொடங்கி கணினி வரை ஏதோ ஒரு வகையில் பேசப்படுகிறது என்பது புலனாகிறது.

தொகுப்புரை

பண்டைய சமுதாயம் பெண்கள் எவ்வளவு மதிப்பு மிக்கவர்களாக நடத்தப்பட்டனர். அழகு தரும் இயற்கைக்கு ஒப்பிட்டு பெண்கள் பார்க்கப்பட்டனர். இதிகாசத்திலும், புராணத்திலும் பெண்கள் மதிக்கப்பட்டனர்.

கல்வெட்டு முதல் கணினி வரை பெண்களின் முன்னேற்றம் நிலை நிறுத்தப்பட்டது. சுதந்திரத்திற்கு முன் இருந்த பெண்களின் நிலை மாறி படிப்படியாக பெண்கள் அனைத்துத்துறைகளிலும் தடம் பதித்தனர்.

இன்றைய நிலையில் பெண்கள் இல்லாத இடமே இல்லை என்ற நிலையில் பெண்கள் சாதனைப் படைக்கப்படுகிறார்கள். மண்ணுலகம் முதல் விண்ணுலகம் வரை பெண்களின் முன்னேற்றம் வளர்ந்துக் கொண்டு வருவதை காண முடிகிறது.

துணைநூற்பட்டியல்

1. சங்க இலக்கியத்தில் மனித உரிமைகள், நாஞ்சில் ஆனந்தன்
2. சங்ககால மகளிர் வாழ்வில், க.திலகவதி பக்.273
3. தமிழ் இலக்கிய வரலாறு, எம்.ஆர்.அடைக்கலசாமி, பக்.144
4. தமிழ் இலக்கியத்தில் பெண்ணியம், முனைவர் அரங்க.மல்லிகா
5. வார்த்தை கேட்ட வரம், தொ-1ப-583
6. தீவுகள் கரையேறுகின்றன, தொ.-3, ப.-269
7. பெண்ணியம், கதிர் மகாதேவன், இரா.மோகன், பக்-81-82
8. பெண்களால் சமுதாயத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும், வானதி சீனிவாசன்

9. பெண்ணியம், இரா.பிரேமா, மு.கு.நூ.பக்-32
10. பெண்களின் சுவடுகளில், சாந்தி சச்சிதானந்தம் முன்னுரை பக்-115.

REFERENCES

1. Sanga Ellakkiyathili Manidha Urimaikal. Najil Anadhan
2. Sanga Kala Magalir Vazhivil. Tilakavathy, Pg.No:273
3. Tamil Ellakkiya Varalaru, M.R. Adaikkalasamy, Pg.No:144
4. Tamil Ellakkiyathili Pengal. Dr. Arangamalliga
5. Vartthai Keitta Varam, 1-P-583
6. Thiuvgal Karaieyrukinrana 3-P-269
7. Penniyam, Kathir Mahadevan, R. Mohan, Pg.No:81-82
8. Pengalal Samuthayathil Matrathtai Erpadutha Mudium, Vanathy Senivasan
9. Penniyam, R. Prema, Pg.No:32
10. Pengalin Suvadugalli, Santhi Sasidhanatham, Pg.No:115